**காலாண்டுத்தேர்வு - மாதிரிவினாத்தாள் --- 2 ( 2019 )**

**மேல்நிலை முதலாம் ஆண்டு**

**வணிகவியல்**

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

**பகுதி --- I**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 20 × 1 = 20

1. பின்வருவனற்றுள் எது வியாபார நடவடிக்கையின் சிறப்பியல்புகள் இல்லை?
   அ) பொருட்கள் மற்றும் சேவையை உருவாக்குதல் ஆ) இடர் ஏற்றல்
   இ) பொருள் மற்றும் சேவை பரிமாற்றம் ஈ) சம்பளம் / கூலி
2. கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது?
   அ) பட்டய (சாசன) நிறுமம் ஆ) அயல் நாட்டு நிறுமம்
   இ) அரசு நிறுமம் ஈ) சட்டமுறை நிறுமம்
3. விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் ---------- தடையை நீக்கலாம்.
   அ) இடத்தடை ஆ) காலத்தடை இ) அறிவுசார் தடை ஈ) இடர்பாட்டு தடை
4. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது ------------
   அ) ஒப்பந்தத்தால் ஆ) கூட்டாளிகளிடையே உறவு
   இ) அரசின் வழிகாட்டல் ஈ) நட்பின் அடிப்படையில்
5. தவறான பொருத்தம் எது?
   அ) கூட்டுறவு சங்கம் --- ஒரு நபர் ஒரு வாக்கு
   ஆ) கடன் சங்கம் --- வேளாண் கடன் சங்கம்
   இ) கூட்டுறவின் கொள்கை --- இலாபம்
   ஈ) கூட்டுறவின் அடித்தளம் --- பரஸ்பர நம்பிக்கை
6. வியாபாரத்திற்கு உறுதுணை புரிபவை என்பது ---------
   அ) வியாபாரம் ஆ) விளம்பரம் இ) பண்டகசாலை ஈ) கட்டுமானம்
7. வேறுபட்ட ஒன்று எது?
   அ) பங்குதாரர் ஆ) பொதுத்துறை நிறுவனங்கள்
   இ) மருத்துவர்கள் ஈ) சில்லறை விற்பனை நிலையங்கள்
8. பின்வருவனவற்றில் எவை தவறான கூற்று ?
   அ) கூட்டாண்மையின் குறைபாடுகளை களைவதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு கூட்டுப்பங்கு நிறுமம்
   ஆ) தனியாள் வணிகம் மற்றும் கூட்டாண்மையைக் காட்டிலும் நிறுமத்திற்கு பேரளவு மூலதனத்தை திரட்ட முடியும்
   இ) நிறுமம் தனது பெயரில் சொத்துக்களை வாங்கலாம்
   ஈ) உறுப்பினர்கள் நிறுமச் சொத்தின் மீது உரிமை கொண்டாடலாம்
9. அனைத்து கூட்டுறவுகளும் நிறுவப்படுவதற்கு ---------
   அ) தொண்டு நிறுவன நோக்கம் ஆ) சேவை நோக்கம்
   இ) இலாப நோக்கம் ஈ) சீர்திருத்த நோக்கம்
10. பல நாடுகளில் இயங்கும் நிறுவனங்கள் ஒரு நாட்டில் இருந்து நிர்வகிக்கப்படுகின்றன. இதனை _______ நிறுவனங்கள் எனலாம்.
    அ) அரசு நிறுவனங்கள் ஆ) பன்னாட்டு நிறுவனங்கள்
    இ) தனியார் நிறுவனங்கள் ஈ) இணை நிறுவனங்கள்

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

11. ஒரு அரசாங்க நிறுவனம் யார் பெயரில் பங்குகளை வாங்குகிறது?
    அ) பிரதமர் ஆ) குடியரசுத் தலைவர்
    இ) இந்தியத் தலைமை நீதிபதி ஈ மாநில முதலமைச்சர்
12. வங்கியர்கள் பணத்தை கையால்பவர்கள் மட்டுமல்ல, ------------- க்கு வழிகாட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள்.
    அ) பொருளாதார வளர்ச்சி ஆ) வர்த்தக வளர்ச்சி
    இ) தொழில் வளர்ச்சி ஈ) சேவை வளர்ச்சி
13. எந்த வகையான கணக்கு, குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட சில தொகையை செலுத்த வேண்டியது கட்டாயம்?
    அ) சேமிப்பு வைப்பு ஆ) நிலையான வைப்பு
    இ) நடப்பு வைப்புத்தொகை ஈ ) தொடர் வைப்பு
14. சரக்குகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ வழங்குவதற்காக பயன்படுத்தப்படும் ஆவணம் -------------------
    அ) பண்டக சான்றாண்மை ஆ) துறைமுக ரசீது
    இ) துறைமுக சான்றாண்மை ஈ) மேற்கூறிய அனைத்தும்
15. சரியான கூற்று எது?
    அ) உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து கனரக சுமைகளுக்குப் பொருந்தாது
    ஆ) விமான போக்குவரத்து வேகமான மற்றும் விலை குறைந்த போக்குவரத்து
    இ) நீர் இயற்க்கை கொடுத்த வெகுமதி ஆகும்
    ஈ) பெரிய சுமைகளையும் எடையையும் சுமப்பதற்கு விமானப் போக்குவரத்து உகந்தது
16. பின்வருவனவற்றில் எது காப்பீட்டின் பணி அல்ல?
    அ) கடன் நிதி அளிப்பு ஆ) இடர் பகிர்வு
    இ) மூலதன திரட்டுதல் உதவி ஈ) மட்டுப்படுத்துதல்
17. வளரும் நாடுகளுக்கு புற ஒப்படைப்பு வழங்கப்படுவதன் சிறப்பு நோக்கம் --------------
    அ) குறைவான கூலி ஆ) நிலம்
    இ) மூலதனம் ஈ) காரணிகள்
18 மிக வேகமான போக்குவரத்திற்கான வழி என்ன?
    அ) தொடர்வண்டி ஆ) சாலை
    இ) கடல் ஈ) விமானம்
19 வங்கியின் முகமைப் பணிகளில் இடம் பெறாதது எது?
    அ) தொடர்பாளராகச் செயல்படுதல் ஆ) வருமான வரிக் கணக்கைத் தயாரித்தல்
    இ) பாதுகாப்பு பெட்டக வசதி ஈ) நிதி பரிமாற்றம்
20. கூட்டாண்மை ஒப்பாவணத்தை இவ்வாறு அழைக்கலாம் -----------
    அ) சங்க நடைமுறை விதிகள் ஆ) கூட்டாண்மை சங்க நடைமுறை விதிகள்
    இ) கூட்டாண்மைச் சட்டம் ஈ) கூட்டாண்மை

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

## பகுதி – II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்** 7 × 2 = 14

21. தொழில் என்றால் என்ன?
22. வியாபாரம் என்றால் என்ன?
23. கர்த்தா என்பவர் யார்?
24. அரசு நிறுமம் என்றால் என்ன?
25. தானியங்கி பணம் வழங்கும் அட்டைப் பற்றி நீவீர் அறிவது யாது?
26. இந்திய உணவு கழகம் பற்றி குறிப்பு வரைக.
27. நிலப் போக்குவரத்தின் ஏதேனும் இரண்டு நன்மைகளை எழுதுக.
28. மருத்துவக் காப்பீடு என்றால் என்ன ?
29. தனி உரிமையியல் இரண்டு நன்மைகளைக் கூறு?
30. பணப் பரிமாற்றம் இடம் பெறாமல் நடைபெறும் வணிகம் எது? விளக்கம் தருக

## பகுதி – III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40- க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7 × 3 = 21

31. பண்டக சான்றாணை மற்றும் பண்டக இரசீது இடையே மூன்று வேறுபடுகளை கூறுக.
32. பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?
33. நுகர்வோர் கூட்டுறவு சங்கத்தை பற்றி சிறு குறிப்பு வரைக
34. கூட்டாண்மை கலைப்பிற்கும், நிறுமக் கலைப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் மூன்றை விவரி.
35. பிரித்தெடுக்கும் தொழிற்சாலை மற்றும் மரபுத் தொழிற்சாலையை வேறுபடுத்துக.
36. தனியாள் வணிகத்தின் மூன்று பண்புகளை விவரி.
37. கடன் கூட்டுறவு விளக்குக?
38. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் யாவை?
39. உண்மைநேர மொத்தத் தீர்வக அமைப்பு பற்றி ஒரு குறுகிய குறிப்பு எழுதுக
40. இந்திய மைய வங்கி, "வங்கிகளுக்கு இறுதி நிலைக் கடன் ஈவோராக விளங்குகிறது" என்ற கூற்று உண்மையா? ஏன்?



## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. வணிகத்தின் சிறப்பியல்புகளை விவரி. ( ஏதேனும் 5 )

    ( அல்லது)

    தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரி. ( ஏதேனும் 5 )

42. அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?

    ( அல்லது)

    சிறுகுறிப்பு வரைக.
    அ) பண்டக சான்றாணை ஆ) பண்டக காப்பாளா இரசீது இ) துறைமுக இரசீது
    ஈ) துறைமுக சான்றாணை உ) வழங்கல் ஆணை

43. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது?

    ( அல்லது)

    தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு - ஓர் ஒப்பீடு செய்க ( ஏதேனும் 5 )

44. கூட்டுறவு சங்கத்தின் நன்மைகள் யாவை?

    ( அல்லது)

    பல்வேறு வகையான வங்கிகளைச் செயல்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்துக. உதாரணம் தருக. ( ஏதேனும் 5 )

45. துறைவாரி நிறுமத்தின் சிறப்பியல்புகள் யாவை?

    ( அல்லது)

    இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளில் ஏதேனும் ஐந்தினை எழுதுக

46. தொழில் இடர்கள் ஏற்படுவதற்கான பல்வேறு காரணங்களை விவரி

    ( அல்லது)

    தனி உரிமையியலின் குணாதிசயங்களைக் கணக்கிடுக

47. பன்னாட்டு நிறுவனத்தின் நன்மைகளை விவரி

    ( அல்லது)

    பண்டைய தமிழ்நாட்டில் கடற்கரையோர வர்த்தகம் பற்ற விளக்குக.